## இப்பாகமுவ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 23 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இந்த அறிக்கையில் 1.3.1, 1.3.5 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்வரும் ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது 6 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 636,976 இற்கான செலவுகள் முற்கொடுப்பனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆண்டின் போது 2014 ஆண்டிற்கான 7 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 194,615 இற்கான செலவுகள் மீளாய்வாண்டிற்கான செலவுகளுக்கு எடுக்கப்பட்டு கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது முன்வரும் வருடம் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 192,034 இற்கான வருமானம் முற்பெறுவனவுகளின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) நிர்மாண வேலை வங்கிக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 3 சந்தர்ப்பங்களில் ரூபா 687,742 ஆகிய நிர்மாண வேலை வைப்பினை பொது வங்கிக் கணக்கில் வைப்பு செய்தல் தொடர்பாக சீராக்கல்கள் மேற்கொண்டிருந்த போதிலும் பொது வங்கிக் கணக்கு தொடர்பாக வங்கி இணக்கக் கூற்றில் அவ்வாறான சீராக்கல் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 7,421,248 பெறுமதியான 27 கடன்கொடுத்தோர் மீதிகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 177,973 இற்கான மூலதன பண்டங்களின் பெறுவனவு வருமானத் தலைப்பில் செலவு செய்யப்படாமல் வெளிக்கள களஞ்சிய கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் வெளிக்களக் களஞ்சியக் கணக்கில் மீதி மற்றும் வருமானம் ரூபா 355,946 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது பிரதேச சபைகளை வலுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 1,000,000 இற்கான தொகை மூலதன வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,658,734 இற்கான தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தியிருந்த ரூபா 1,718,311 இற்கான கடன் தவணைகளின் பெறுமதியினை அக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் பெறவேண்டிய பதவியணிக் கடன் வட்டி மீளளிப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) நிர்மாண வேலைகளின் கொடுப்பனவு அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டு தொடர்பாக மூலதனச் செலவுகளின் பெறுமதி ரூபா 27,408,051 தொகை எனினும் வருமானச் செலவுக் கணக்கில் மூலதனச் செலவுகள் என ரூபா 10,550,519 தொகை காட்டப்பட்டிருந்தமையால் கணக்குகளில் மூலதனச் செலவு ரூபா 16,857,532 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 45,167,895 தொகை எனினும் அதனை ரூபா 45,640,619 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 472,724 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

---------------------------------------------

உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை உரிய முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,658,734 ஆகக் காணப்பட்டது. மேலும் சபையினால் மாதாந்தம் செலுத்த வேண்டிய தவணைப் பணம் என நிதியத்தினால் ரூபா 9,405 வீதம் அறவிடப்பட்டிருந்தது. அவ் அறவீடுகள் சபையின் எந்த அலுவலர் தொடர்பாக அறவிடப்பட்டது என்ற தகவல்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடு இடையே ரூபா 3,852,657 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 27,662,417 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 19% அதாவது ரூபா 5,230,418 தொகை 3 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும்

மீதிகளாகும். அதே போல் வருமான கடன்பட்டோர் மீதியில் பல வருட காலமாக தீர்க்கப்படாத ரூபா 59,215 இற்கான நிலுவை களியாட்ட வரி மீதியொன்று காணப்பட்டதுடன் முற்கொடுப்பனவு மீதியில் தீர்க்கப்படாத ரூபா 9,961 இற்கான தற்காலிக ஓய்வூதிய மீதியொன்றும் மற்றும் ரூபா 10,674 இற்கான ஓய்வூதியப் பணிக்கொடை மீதியொன்றும் காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,558,440 ஆக காணப்பட்டதுன் அவற்றில் 32% அதாவது ரூபா 3,653,712 தொகை 3 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாகும். அதே போல் ரூபா 3,604,210 இற்கான திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு மீதி ரூபா 742,390 பெறுமதி காலம் முடிவடைந்த 60 வைப்பு மீதியில் அடங்கியிருந்தது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

13 கணக்கு விடயங்கள் தொடர்பாக 09 சந்தர்ப்பங்களில் திரண்ட நிதியத்திற்கு ரூபா 2,024,389 தொகை 3 நடைமுறை பொறுப்புக்கள் கணக்குகள் தொடர்பாக ரூபா 10,474,454 உம் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்புத் தொகை கணக்கிற்கு ரூபா 829,713 தொகைக்காக சீராக்கல் மேற்கொண்டிருந்த போதிலும் அது தொடர்பான தகவல்கள் அல்லது பெற்றிருந்த அங்கீகாரம் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

02. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 8,965,427 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,172,360 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 33,137,787 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 27,616,743 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 10,550,519 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 8,100,797 இற்கான மிகை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 78,663,571 தொகையில் 78% என ரூபா 60,990,062 சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 27,616,743 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 87,628,998 தொகையில் 60% அதாவது ரூபா 52,762,302 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. அவற்றில் அண்மித்த 86% ஆகிய ரூபா 45,640,619 தொகை சம்பள மீளளிப்புத் தொகை என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்தது. அப் பெறுமதி வருமான உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 3,912,758 ஆகக் காணப்பட்டதுடன் வருடாந்த பில்போடப்பட்டவை ரூபா 1,696,313 ஆகும். 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32-42 வரையான விதிகளின் பிரகாரம் அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் ஆதனங்களை தடைசெய்து நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் நடைமுறையை அமுல்படுத்தி இருக்கவில்லை.

2.3.2 வாடகை

----------------

வாடகையாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 3,631,977 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. அவை வருடாந்த பில் போடப்பட்டவைகளில் 48% ஆகும்.

03. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் வாகனங்கள் மீது கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 73,380,749 ஆகும்.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் துண்டுகளாக பிரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக காணித் துண்டுகளில் வரைபுகளை அங்கீகரிக்கும் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக காணிகள் துண்டுகளாகப் பிரித்தல் அவற்றிற்காக நூற்றிற்கு 1 வீத வரி தொகையினை சரியான முறையில் அறவிடப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக மற்றும் பொது வேலைகளுக்காக சபைக்கு சாட்டப்பட்டிருந்த காணித் துண்டுகள் பற்றிய தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) சபையினால் பயன்படுத்தப்படும் 05 வாகனங்கள் தொடர்பாக 2014 ஆண்டு மற்றும் அதற்கு முந்திய சுமார் 06 ஆண்டுகள் முதல் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருந்தனர்.

3.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மொத்த மீண்டுவரும் செலவுகள் என ரூபா 70,649,364 தொகை ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளவாறான செலவு ரூபா 87,628,998 ஆக காணப்பட்டமையால் மதிப்பீட்டுத் தொகையை மிகைத்து ரூபா 16,979,634 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்